செ.வெ.எண் : 47/ ஜூன் நாள் : 23.06.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

# முதுகுளத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் குறுகிய கால தொழிற்திறன் பயிற்சிகளுக்கான மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூரில் செயல்பட்டு வரும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் குறுகிய கால தொழிற்திறன் பயிற்சிகளுக்கான மாணவர் சேர்க்கை நடைபெறுகின்றது. விருப்பமுள்ள மாணவ, மாணவியர்கள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதுகுளத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் வழங்கியுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

நாட்டின் பொருளாதாரம் சிறக்கவும், வேலை வாய்ப்புகள் பெருகவும் தொழிற்கல்வி அவசியமாகும். தொழிற்கல்வியை ஊக்குவிப்பதிலும், தொழிற்திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்குவதிலும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், முதுகுளத்தூரில் திறன்களை மேம்படுத்தும் குறுகிய கால பயிற்சிகள் டொமஸ்டிக் எலக்ட்ரிசியன் - 8 ஆம் வகுப்பு தேர்ச்சி (மூன்று மாதங்கள்), வெல்டர் (கேஸ் மற்றும் ஆர்க்) - 8 ஆம் வகுப்பு தேர்ச்சி (மூன்று மாதங்கள்) ஆகிய தொழிற் பிரிவுகளில் நடைபெறுகிறது. பயிற்சியின் போது மாதம் ரூ.3,000/- உதவித்தொகை வழங்கப்படும்.

இந்த பயிற்சிகள் 300 மணி நேரம் முடிவு பெற்ற பின்பு சுய தொழில் துவங்கிட உதவிகள் வழங்கப்படும். எனவே முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் மேற்காணும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளில் சேர்ந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்பயிற்சியில் சேர்ந்து பயனடைவதற்கு முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், முதுகுளத்தூர் - 623 704 என்ற முகவரியிலோ அல்லது 04576-222114 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு விபரங்கள் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**